சைவ சமய வீர நிதழ்.

Registered as a News Paper in Ceylon P.M.G. No. H. A. 913002 of 1953.

விரோதிஞு (1889) ஆனி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசூ] யாழ்ப்பாணம்:- குரோதிஞு மார்கழிமீ ௧௧உ வெள்ளிக்கிழமை (25 December. 1964) [இல-ந-அ]

## கடவுளின் சொரூபம்

(பதியிலக்கணம்)

இற்றைக்குப் பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னர் நாம் திருப்பத்தூரில் இருக்கும் பொழுது சைவ சித்தாந்த சாஸ்திர விஷயமாய் ஆங்கிலேய பாஷையில் எழுத ஆரம்பித்து அதுமுதல் இதுவரையும்உழைத்துவருவேமாயினேம். அப்படி உழைத்து வந்ததில் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருவருட்பயன், உண்மை விளக்கம், திருமந்திரம், சைவசமயநெறி முதலிய உரையுடன் கூடிய மொழிபெயர்ப்புகளும், சித்தாந்த தீபிகையில் எழுதி வந்த பத்திரிகைகளும் ஆக்கப்பட்டுள்ளன. இவைகளும் கனம் ஜி. யூ. போப்பையரால் இயற்றிய திருவாசகமுமே, சைவசித்தாந்தத்துக்கு ஆங்கிலேய பாஷையில் முக்கிய ஆதரவுகளாக ஏற்பட்டுள்ளன. இப்பிரசுரங்கள் மூலமாக ஆங்கிலேயர்களுள்ளும், ஆங்கிலேயப் படிப்புள்ளவர்களுள்ளும் சித்தாந்த சாஸ்திர விஷயமாய் விசாரணையேற்பட்டிருப்பதைக்காண மிகவும் களிப்படைகின்றனர், அதிற் சில கிறிஸ்தவ பாதிரிமார்கள் சித்தாந்த சாஸ்திரங்களில் விஷேசமாய்ச் சிந்தையைச்செலுத்தி கிறிஸ்தவ சங்கங்களிலும் பத்திரிகைகளிலும் அதனைப்பற்றிப் பேசியும் எழுதியும் இருக்கின்றார்கள். அவற்றுள் இறுதியாக, சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் பத்திரிகையில், 20 தொகுதி 9-ம் பக்கத்தில் கனம் இ. கவுடி துரையவர்கள் வரைந்துள்ள சில அபிப்பிராயத்தைப் பின்வரைகின்றேம்.

"சைவ சித்தாந்தத்தைப் போன்று நம்முடைய சிந்தையைக் கவரத்தக்கது வேறெந்தச் சமயமும், ஆசாரமும் பொருளும் இன்று," "இந்த மதம் அதிபூர்வமாயுள்ள பெருமைவாய்ந்தது. பொருளில், தென்னிந்தியாவின் அதிபூர்வகாலந்தொடங்கி வந்துள்ள எல்லா உண்மைகளையும் தனக்கு ஆஸ்தியாகக் கொண்டது. தமிழர்களுடைய சொந்த மதம் எனக் கிடந்தது. இச்சமயத்தை நோக்க மற்றெல்லா மதங்களையும் சற்றுப் புறம்பென்றே தள்ளவேண்டும்.

"இச்சமயத்தாரின் பெருந்தொகையை முன்னிட்டும், அப்பொருள்களில் சிலவற்றின் அதிபூர்வீகத்தை முன்னிட்டும், சைவ சித்தாந்தம் தமிழர்களுக்கே யுரியதாகும் அதனால் கிறிஸ்தவ பாதிரிமார்கள் அதனைப் படிப்பது அதிக அவசியமாகும்.

"இன்னும், இதன் அதிக சிறப்பாகக் கூறவேண்டிய அம்சத்தை இறுதி வரை கூருது நிறுத்தினம். அதாவது சமயப்பொருள்களிலும், பக்தியொழுக்க நலத்திலும், தென்னிந்தியாவிலுள்ள எல்லா மார்க்கங்களிலும் சைவசித்தாந்தம் உயர்வறச் சிறந்ததென்பது. அற்றன்று, இந்தியா முழுதினுமே இது சிறந்துள்ளது என்று கூறினும் தவருகா அதன் உண்மையை நீதியாக ஆராயுமிடத்து இந்திய சமய சாஸ்திர மார்க்கங்களில் அதி உன்னத நிலையைப் பொருந்தியிருக்கின்றதென்பது தெற்

தொடர்ச்சி 2-ம் பக்கம்

### நற்சிந்தனை

சிவனையல் லாமல் தேவரு
மில்லை
சிவனையல் லாமல் சீவரு
மில்லை
சிவனையல் லாமல் தேகமு
மில்லை
சிவனையென் சித்தத்துட்
கண்டுகொண்டேனே.

### குரும்பசிட்டி அம்பாள் ஆலயம்

—0—

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் 11-12-64-ல் கொடியேற்றத்துடன் ஆரம்பித்த திருவெம்பாவைப் பூசை 20-12-64 அன்று நடைபெற்ற தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடைந்தது, பத்து நாட்களும் நடைபெற்ற சமயச் சொற்பொழிவுகள் விழாவுக்குச் சிகரம்வைத்ததுபோல் சிறப்பாக விளங்கின: விழாவின் 8-ம்நாளாகிய 27-12-64 ஞாயிற்றுக்கிழமை அன்று குளிர்த்தி விழா நடைபெறவிருக்கின்றது. ந. — வி.

## நாடிய மனத்துள் ஆடிய பெருமான்

[ விஷகடி வைத்தியர்: திரு. க. சிற்றம்பலம் ]

சைவநெறி தழைத்தோங்க சிவஞானப் பாலாறு பாரெல்லாம் பரந்தோட இறைவனருளாலே அவதரித்தார் மாணிக்கவாசகஞர். அவர் அள்ளிச் சொரிந்த மாணிக்கம் போன்ற வாசகங்களை அடியார் கூட்டம் மார்கழித்திங்கள் தோறும் பாடிக் களிக்கிறது. இறைவன் தமது திருக்கரத்தால் எழுதிய திருவாசகம் மனிதகுலம் உய்யத் தோன்றிய பெருமருந்தாகும் இறைவன் இயற்கை வடிவினஞய், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாய் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈபவஞய் விளங்குவகை வாதவூரர் திருவாசகத்தில் காணலாம்,

மார்கழி மாசம் பனி மழை குளிர், கொசு இவைகளால் மக்கள் அல்லறபடுமகாலம். மனச் சஞ்சலம் மானிடரிடத்தில் இயல்பாக உள்ள காலம் அக்காலத்தில் துன்பத்தை நீக்கி மூத்திக்கு வித்தாகவுள்ள இறைவனை எண்ணிஞல் பகலவனைக் கண்ட பனி போலவும், ஒளியைக்கண்டு இருள் நீங்கும் முறையைப் போலவும் அருளிஞல் ஆணவ விருளை நீக்க, இறைவனை நினைவுபடுத்தும் முறையில் திருப்பள்ளியெழுச்சியை ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் மணிவாசகர் [illegible] பொருத்தமுடையதாகும்.

#### துன்பத்துள் இன்பம்

துன்பமான மார்கழித் திங்களில் மனம்தூய்மை அடையும்பொருட்டுச் சிறப்புப் பொருந்திய விரதம் அனுட்டித்தல் ஆன்மா ஈடேற வழியாகும். இக்கருத்துடன்போலும் இக்காலத்தில் திருவெம்பாவை ஓதுதலும் விரதம் அனுட்டித்தலும் உண்டாயின பிறவியற்ற ஆன்மா இறைவனிடம் இரண்டறக் கலந்து சிவஞான சோதியுள் கலக்கிறது. இதை உணர்த்துவதற்காகததான் திருவெம்பாவை முடிவில் ஆருத்தரா தரிசனம் ஏற்பட்டது.

#### மாணிக்கவாசகருடன் ஆடிய நடனம்

திருவாதவூரில் அவதரித்த மணிவாசகர் பாண்டியனிடம் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் பாண்டியனுக்குக் குதிரைகள் வாங்கும் நோக்கமாகப் புறப்பட்டார். இச்சமயம இறைவன் இவருடன் நாடகமாட விரும்பி திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் சிவகணங்கள் புடைசூழ குருவடிவாக எழுந்தருளிஞர். குதிரை வாங்க வந்த மணிவாசகர் இக் குருவிடம் ஞானுேபதேசம் பெற்ருர் வந்த வேலை முடிந்தது. இறைவனை எண்ணி வாதவூரர் உருகிஞர். இதன் பிறகு [illegible]

தொடர்ச்சி 2-ம் பக்கம்

## பேரின்பம்

—:0:—

— திரு சோ. க. வேலாயுதர் —

இந்நிலவுலகின் கண்ணே வாழுகின்ற பல்வேறு வகைப்பட்ட மாந்தரும் விழைவது இன்பமே அஃது ஒவ்வொருவரதும் இடம், பொருள், ஏவலால் வேறுபாடடையினும் மூலாதாரமான பொதுவியல்பால் வேறுபாடுறுவதில்லை. இந்த இன்பத்தை மூவகைத்தாக வகுத்தனர் பேரியோர். அவை புலனின்பம் கரணவின்பம், ஆத்ம இன்பம் என்பனவாகும். இவற்றுள் முன்னைய இன்பமிரண்டும் பக்குவமெய்தாதார் விழையும் போலி இன்பங்களாகும். இவை காலத்தாலும் அளவாலும் வரையறுக்கப்பட்டனவாகும்.

மூன்ருவது இன்பம் எய்தற்கரியது. முயன்று பக்குவகாலத்தே எய்தற்பாலது, என்றுமழியாதது. நுகருந்தோறும் இன்பத்துள் ஆழ்த்தி எட்டமுடியாத ஒரு பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்வது. இதனை அடைய விழைவார் சிலர். அச்சிலருள்ளும் உணர்ந்து அனுபவிப்பவர் மிகச்சிலர்.

புலனின்பம், கரணவின்பம் என்பன இன்பம் போலத் தோன்றினும் பொதுவாக மக்களாகப் பிறந்த எவரும் அனுபவித்து இன்பம் எனச் சொல்லினும், அது துன்பமுடையதுவேயாகும். இவ்வாறு உரைப்பதனை அங்கீகரிப்போர் அறிஞரும் அனுபவஸ்தவருமேயாவர். ஏனையவர் இத்தகைய இன்பத்திஞம், சிற்றின்பமே எய்துதற்கரியதென்பர். உலக நிலையோடு ஒட்டி வாழ்பவர் அதுவேதான் வாழ்வு என்றும், மறு உலகம், மறு பிறப்பு என்பவற்றை யார் கண்டார், ஏன் காணுத ஒன்றினைப்பற்றிக் கனவு கண்டுகொண்டு அதற்காக வழிவகுக்க வேண்டும் என்றும்கூறும் உலகாயதநெறி நிற்பார் இதனையே போற்றுவர். இத்தகைய நிலையினையுடையார் இதனை ஒரு காலத்து தெவிட்டிவிட்டது என வெறுப்படைதலுங்கூடும். அக்காலம் விழைவதுவே என்றுமழியாப் பேரின்பமாகிய ஆத்ம இன்பமாகும். ஆண், பெண் உறவால் ஈருயிர் அனுபவிக்கின்ற அந்த ஒரு இன்ப நிலையிலும் பன்மடங்கு இன்பம் பயப்பது, அளவிடற்கரியது, இறைவனுக்கும் உயிருக்கும் இடையே ஏற்படுகின்ற ஆத்ம இன்பமாகும். இதனை அடைந்தவர் நிலையை எடுத்துக்கூறி விளங்கச் செய்வது முடியாத ஒன்ருகும் அனுபவ உணர்வான் அறியப்படுவது ஒன்றே இஃது.

ஆகவேதான் எல்லாம் இன்பம் என்ற பொதுப் பிரிவுள் அடங்குகின்றன. இவ்வின்பம் ஒவ்வொரு மாந்தரதும் பக்குவ நிலைமைக்குத்தக அவரவர் நுகர்ந்து அனுபவிக்க ஏதுவாயிருக்கின்றது. உலகிற் பிறந்துழல்கின்ற அத்தனை உயிர்களும்-தாவரசங்கமத்துள்ள அத்தனை பிறவிகளும் - அனுபவிக்கின்றது சிற்றின்பம் ஒன்றுதான்,

நமது சைவம் பேசும் பேரின்பம்தான் யாது, அதுவே நமது சந்தானுசிரியரும் சமயாசிரியரும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## இயற்கையன்னையின் சீற்றம்

சென்ற செவ்வாய்க்கிழமையிரவு 90 மைல் வேகத்தில் வீசிய சூருவளியால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா போன்ற பகுதிகள் சோபையிழந்து காணப்படுகின்றன. முறிந்த மரங்கள் ஓர்புறம் முகடிழந்த வீடுகள் ஓர்புறம் இப்படியாக வீதிகள்தோறும் காட்சியளிக்கின்றன இக் கொடுங் காற்ருல் நேர்ந்துள்ள பொருட்சேதமோ அளவில! பலஇடங்களில்உயிர்ச்சேதங்களும் பரிதாபகரமான விபத்துகளும் சம்பவித்துள்ளன, நெடுந்தீவுக் கடற்கரை ஓரமாக சடலங்கள் மிதப்பதாக அறிகிறேம். இதற்கிடையில் கடற்ருெழிலாளர்களுட் பலரையும் அவர்களது சில படகுகளையும் காணவில்லையாம். விமானங்கள் படகுகளைத் தேடும் வேலையில் ஈடுபட்டுள்ளன.

இங்கே நடமாடிய சூருவளிக் காற்று இந்தியாவிலும் நுழைந்து எவ்வளவோ கொடுமைகளைச் செய்திருப்பதாக அறிகிறேம். இராமேசுவரத்தின் ஒரு பகுதி அழிந்ததாகவும், பாம்பன் பாலம் அள்ளுண்டதாகவும், ஆங்கு இருநூறு குடும்பங்கள்வரை கடற்கொந்தளிப்பில் அகப்பட்டனரென்றும் செய்திகள் வந்தவண்ணமாகஇருக்கின்றன. இவ்வளவு தூரம் இயற்கையன்னை எம்மீது சீற்றங்கொண்டுள்ளாள்! இயற்கையன்னையின் தண்டனைக்கு எம்மால் தவறமுடியுமா? கடவுள் வழிபாடு ஒன்றே எம்கவலை நீக்கும் மருந்தென்பதை உணவோமாக. இந்தச் சந்தர்ப்பத்தில் நம் நாட்டு மக்கள் கட்சிபேதங்களை மறந்து வீடிழந்து பொருளிழந்து துன்பமடைந்துள்ள மக்களுக்கு உதவி செய்வது பெரும் புண்ணியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

குரோதி ஞூ மார்கழி மீ
ககவ வெள்ளிக்கிழமை


## விஞ்ஞானக்கல்விக்கு அறநூல்கள் தேவை

பரமேஸ்வராக்கல்லூரி மேலும் விளங்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் K. M. முன்ஷி அவர்கள் ஷைசர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் 29-11-64 அன்று ஆற்றிய விரிவுரை நமது நாட்டில் உயர்தரக் கல்வி நிலையங்களை நிருவகிக்கின்ற அதிகாரிகளுக்குச் சிறந்த கருத்துக்களை உதவுகின்றது. "பாரதநாட்டில் 60 ஆண்டுகளுக்கு முன் இருந்த கல்வி நிலையங்களிலும் பார்க்க இக்காலம் கூடுதலான கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன. அங்ஙனமாயினும் நாட்டில் கல்வியின் தரமும் மாணவர் ஒழுக்கமும் குறைந்து விட்டன. இந்நிலைமைக்கு முக்கியமான காரணங்கள்:- கற்றுத்தேறிய மாணவர்களுக்கு உத்தியோகம் கிடைத்தலரிது. மாணவர்களிடம் குருபக்தி குறைந்து விட்டது. மாணவர்கள் வசிக்கும் இல்லங்கள் அவர்களுடைய ஒழுக்கத்தையும் சமய வாழ்க்கையையும் பாதுகாக்கத் தவறிவிட்டன. உயர்தரக்கல்வி நிலையங்களில் ஒழுக்கத்தை வளர்க்கக்கூடிய அறநூல்கள் பாடப் புத்தகங்களாகச் சேர்க்கப்படவில்லை. மாணவர்கள் உள்ளத்தில் காதலுணர்ச்சியைத் தூண்டக்கூடியதாக சினிமாப் படங்கள். நாவல்கள், பத்திரிகைகள் உதவுகின்றன. ஓர் ஆசிரியர் 50 தொடக்கம் 100 வரை தொகையுள்ள மாணவர்களைக்கொண்ட வகுப்பை நடத்தவேண்டியிருப்பதால் அவர் மாணவர்களுடைய பழக்கவழக்கங்களைத் தனித்தனி கவனித்து அவர்களைத் திருத்தமுடியாத நிலையிலிருக்கின்றனர். ஆசிரியர்களும் பண்டைக்காலக் குருமாருடைய பண்புகளையும், கற்பிக்கும் முறைகளையும் நெகிழவிட்டனர், மாணவர்கள் அரசியலில் ஈடுபட்டு, அரசியற் சூறவளியினுலெற்றுண்டு தங்கள் கடமையை மறக்கலாயினர்." இவ்வாறு பேராசிரியர் இக்காலக் கல்வி முறையிலுள்ள சீர்கேடுகளைத் தம் பழுத்த அநுபவ வாயிலாக ஆராய்ந்து கூறியுள்ளனர். அவர் கூறிய குறைகள் நமது நாட்டிலுள்ள உயர்தரக்கல்வி நிலையங்களிலும் காணப்படுகின்றன.

விஞ்ஞான அபிவிருத்தியும், நவீன யந்திர சாதனங்களும், விஞ்ஞானக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கத் தூண்டுதல் செய்கின்றன, மாணவர்களும் அதனையே கற்கப் பேரவாக்கொண்டுள்ளனர். அதனால் லௌகிகக் கல்வி பெருகி ஆத்மீகக் கல்வி குறையலாயிற்று. மாணவனுடைய உள்ளம் புலன் வழிச் செல்வதையே லௌகிகக்கல்வி தூண்டும். ஆத்மீகக்கல்வி மனத்தைப் புலன்வழிச் செல்வதைத் தடை செய்யும். முந்தியது மாணவனிடத்தில் ஆசை, செருக்கு, பொறாமை, கோபம், பழிக்கஞ்சாமை முதலிய தீய குணங்களை விருத்தி செய்யும். பிந்தியது மாணவனிடத்தில் வாய்மை, பொறை, இரக்கம், நிராசை, கடவுள் பக்தி முதலிய பண்புகளை வளர்க்கும். இக்குணங்களைப் பெறுவதே கல்வியின் நோக்கமாயமையவேண்டியது அவசியம். அத்தகைய பண்புகளை உடைய மாணவனையே உயர்தரக்கல்வி நிலையங்கள் நாட்டுக்கு உதவ வேண்டும். அவர்களே பிற்காலத்தில் நாட்டினது சிறந்த தலைவர்களாவர். இக்கருத்தைக் கொண்டே பேராசிரியர் உயர்தரக்கல்வி நிலையங்களில் அறநூல்களைப் பாடப்புத்தகங்களாகக் கற்பிக்கவேண்டுமெனத் தமது விரிவுரையில் வற்புறுத்தியுள்ளனர்.

# கடவுளின் சொரூபம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றென வெளிப்படும். இதில் கிறீஸ்தவபோதத்தொடர்பை நாம்·சேர்த்துப் பார்க்கவில்லை.

இந்த விஷயமாகவே நாம், திருவருட்பயன் மொழிபெயர்ப்பின் முகவுரையில் குறித்திருப்பதை ஈங்கு வரையலாயினேம்.

"வடமொழியிலுள்ள மறைமொழி வயிரக் கணிகளில் பொறிக்கப்பட்ட பெருமையும் ஒளியும் வாய்ந்த மணிகளைச் சரியாகச் சாணையிலரைத்துக் கழுவி அழகாகவும் ஒழுங்காகவும் அமைக்கப்பட்ட இந்திய மகுடமாகும் இச்சித்தாந்த சாஸ்த்திரங்கள். இதில் கொஞ்சமேனும் ஐயம் வேண்டுவதில்லை"யென்பதாம்.

சமாஜக் கூட்டங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் இச்சமயத்தை அதிகமாக வெளிப்படுத்துவார்கள் இன்றியே, இச்சமய உண்மைகள் ஆங்கிலேயப் படிப்பினர்களுக்குப் புலப்படாமலும் தகுந்தபடி நன்கு மதிக்கப் படாமலும் போயிற்று. ஆகவே இப்பத்திரிகையில் நம்முடைய அபிப்பிராயங்களை வெளியிட இடம்தந்த பத்திராசிரியருக்கு நாம் மிகவும் நன்றி பாராட்டுவோம்.

மேல் சைவ சித்தாந்தமானது தென்னிந்தியர்களதேயெனக் கூறிவரும் சில ஆங்கிலேயர்களும், இந்தியர்களும் உளரேயாயினும், முதலிலிருந்து எம்முடைய அபிப்பிராயம் இந்து மதத்தில் சிறப்பும் புனிதமும்பழைமையும் வாய்ந்தது அதுவெனவும், புதியன அன்றெனவும், ஆதி வேதாகம உபநிஷத்துக்களினுற் பெறப்பட்டதென்பதும் தான். சைவசமயத்தை யாதாமொருவர் ஓர் காலத்து இத் தேசத்தில் நாட்டியதாகக் கண்டிலேம். இந்துக்களில் பெரும்பாலாரும், மகாபாரத காலத்துக்கு முற்பட்டே சைவர்களாயிருந்திருக்கிறார்கள்,

ஆதிகாலம்தொட்டு, ருத்ர சிவசொரூபத்தின்பாலே பரத்துவம் ஸ்தாபிக்கப்பட்டும், இருக்குவேதத்தில், ருத்திரன் 'காதபதிம் மேதபதிம்' என்ற வசனத்தினுல் 'அவர் யாகங்களுக்குப் பதியாயுள்ளவர்; என்றது ஸ்தாபிக்கப்பட்டும், அது மற்ற மதங்களும் பிரவர்த்திக்க எழுந்த காலமாகிய இராமாயணம எழுதிய வான்மீகி மகாரிஷியின் காலத்திலும் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இருக்கு வேதத்தில் இங்ஙனம் கூறியதற்கு இணங்க யசுர்வேதமானது, "ஏக ஏவ ருத்ரோ நத்விதியாயதஸ்தே" "ஒரே ருத்ரன் உள்ளான் இரண்டாவதாக கேட்கப்படவில்லை யென்றும், "ய ஏகோ ருத்ர உச்சயதே" "ஒருவனுகச் சொல்லப்பட்டவன் ருத்ரன் என்றும் முறையிட்டது. அதையநுசரித்தே திருமூலநாயனுரும்,

(1) ஒன்றவன்றுனே
இரண்டவ னின்னரு
ணின்றன‌ன் மூன்றினு
ணன்குணர் தானைந்து
வென்றனன் ஆறு விரிந்தன
னேழும்பர்ச்
சென்றவன் றுளிருந்தா
னுணர்ந் தெட்டே.

என்றும்,

(2) தானுன வேதாந்தந்
தானென்னுஞ் சித்தாந்த
மானு துரியத் தனுவன்
றனைக் கண்டு
தேனுர் பராபரஞ் சேர்
சிவயோகமாய்
ஆனுமலமற் றருஞ்
சித்தியாதலே.

என்றும் அருளினுர்.

இங்கு காட்டப்பட்டமுதல் மந்திரம்,"ஏகமேவாத் விதீயம் பிரம்ம" என்னும் சாமவேத சாகையைச் சேர்ந்த மற்றுருப நிஷத் வசனத்தைப்போல எல்லாருக்கும் தெரிந்ததல்ல. ஆயினும் மோக்ஷ மூலரபண்டிதர் பரம் பொருளைக் குறிப்பதாக முன்னெழுந்த சப்தங்கள் ருத்ரன் அரன், சிவன் முதலியவைகளே யென்றும் பிரமம், ஆத்மா, பரமாத்மா என்ற பதங்கள் அல்ல என்றும் காட்டியிருக்கிறார். விசாரிக்கில், இந்த பிரமம் முதலிய பதங்கள் இருக்கு வேதத்தில் இக்கருத்துடன் உபயோகப்படவேயில்லையென விளங்கும். மேலும் யசுர்வேதத்தில் பிறந்துள்ள 'நத் விதீயம்' என்ற பதமே "அத்விதீயம்" என்ற பதத்திற்குப் பூர்வீகமானதென்றும் முதலாயுள்ளதென்றும்ஓர்ந்துணரற்பாற்று நத்விதீயத்துள்ள எதிர்மறை நகரம் கெட்டே அத்விதீயம் எனப் பிறந்ததாகும்.

மேல் எம் பரமாசாரியாகிய மெய்கண்ட தேவரும் இம் மதத்திலே [illegible]

தொடர்ச்சி 3ம் பக்கம்

# வாயில்லாப்பிராணிகளை வாழவிடுங்கள்

மக்கட் பிறப்பு மாண்புடையது. அறிவின்மேம்பட்ட மனிதர், அறநெறி சார்ந்து ஆன்ம ஈடேற்றம் அடைவதைக் குறிக்கோளாகக்கொள்ளல் வேண்டும். உயிருள்ள பிராணிகள் பல கோடிக் கணக்காக உலகில் தோன்றியுள்ளன. கடவுளின் அருள் எல்லாவுயிர்களுக்கும் உண்டு. "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்" என்றார் முன்னையோர். ஆனுல், கடவுளை வழிபடும் மக்கள் அக் கடவுளின் வியாபகமான பிராணிகளைக் கொன்று துரோகம் செய்யலாமா? ஜீவ கருணை மக்கள்பால் இல்லாதிருந்தால் கடவுளின் கருணையை எப்படிப் பெறமுடியும்? ஆ! பசுக்களைக் கொலைக்களம் அனுப்பு

பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

வோர் எக்கதி புகுவார்களோ அறியோம்! மற்றொருசாரார் பிறர் கொன்ற பிணத்தை அருந்தி இன்புறுகின்றார்கள். கொலையும் புலால் அருந்துதலும் பெரும் பாவமாகும். தீர்த்தமாடுவர், கடவுள் வழிபாடு செய்வர், வேதாந்தம் பேசுவர், இவற்றால் யாது பயன்?

கங்கையிற் படிந்திட்டாலும்
கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போல் கோடிதானம்
வள்ளலாய் வழங்கினுனும்
சங்கையில்லாதஞான தத்துவ
முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன்
பேய்நர கடைவ னன்றே.

திருவள்ளுவரைப் போற்றுபவர், அவர் கூறிய,

"அவிசொரிந் தாயிரம்
வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணுமை
நன்று".

என்பதைச் சிந்திக்கலாமே! அவர் ஓரிடத்து நரகம் என்பதொன்று உண்டென்பதை அண்ணுத்தல் செய்யாதளறு என்று விளக்கியமை பொய்யதன்றே! துன்பத்தை நாம் விரும்பலாமா? கையில்விளக்கிருக்க யாரும் கிணற்றுள் வீழ்வரா?

இயற்கை அமைப்புத்தானெப்படியிருக்கின்றது? புலி, கரடி சிங்கம் போன்றவை மாமிசஉணவுடையன. அவற்றின் பற்களும் மக்களின் பற்களும் வேறுபாடுடையன. அதாவது அரைத்து மென்று சாப்பிடத்தக்க பற்களே மனிதருக்கு அமைந்திருக்கின்றன. சத்துள்ள தாவர உணவுகள் அதிக பாவமற்றன. தானிய வகைகள் தக்க முறையில் பயன்படுகின்றன. கடவுள், குரு, அடியார் என்ற நினைவுடன் பாகஞ் செய்து நிவேதித்து அருந்தவேண்டும். சில செடி கொடி மரம் இவைகளிலிருந்து காய், பூ, பிஞ்சுகளை எடுத்தாலும் உயிருடன் அவை பலகாலம் இருக்கும். மிருகம் பறவையை அப்படி அடித்தால் வெட்டினுல் உயிருடன் இருக்குமா? சில் வாழ்நாட் சிற்றறிவுடைய மக்கள் பிறவிப்பயனை இழந்துநாடோறும், அநித்தியமான உடம்பைப் போஷிப்பது மெய்யுணர்ச்சி தலைப்படாமையேயாம். ஐயகோ! "குக்குடம் வாழ்க" என்பர், எங்கே வாழ்வது? வயிற்றிலா? சிந்தனைக்கரிய சிவகுகப்பெருந்தேவர்களை வழிபடும் நாம் சீவகருணையை விற்றுவிடுவது

தொடர்ச்சி 3ம் பக்கம்

## அணிந்துரை அரங்கம்

அருளமுதம்

சைவசமய வெளியீடு
கார்த்திகை இதழ்.

ஆசிரியர் : முத்தமிழ்மணி
பிரம்மஸ்ரீ C. S. S. மணிபாகவதர்
துணையாசிரியர் :
எஸ். கணேசசுந்தரன்

சந்தா விபரம்
ஆயுள் சந்தா ரூபா 100-00,
வருட சந்தா ரூபா 6-00
தனிப் பிரதி சதம் —-50.

நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு நல்லூர் கந்தகோட்டம் 179-ம் இலக்கத்திலிருக்கும் காரியாலயத்திலிருந்து வெளிவருகின்றது.

முகப்பில் நல்லூர்க்கந்தன் திருவுருவம் அழகாகக் காட்சியளிக்கின்றது. "பாவை நோன்பு" என்ற விஷயம் தலையங்கமாக மிளிர்கின்றது. அதில் மார்கழி மாதம் தவத்துக்குரிய காலமெனவும் அடியார்கள் நீராடி இறை வழிபாடாற்றித் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை என்னும் பிரபந்தங்களை ஓதல் நன்மை பயக்குமெனவும் காட்டப்பட்டிருக்கின்றது. திருவெம்பாவையைப் பொருளுணர்ந்து ஓதுவதற்குத் துணையாக இலகுவான வசன நடையில் பொழிப்புரையும் வெளியிடப்பட்டிருக்கின்றது. பெரிய புராணத்திலுள்ள திருநாளைப் போவார்நாயனுர், இயற்பகை நாயனுர், திருநீலகண்டநாயனுர், காரைக்காலம்மையார் முதலியசரித்திரங்களை இசைப் பாடல்களாகப் பாடிப் பிரசங்கம் செய்த கோபாலகிருஷ்ண பாரதியார் வரலாறும் சுருக்கமாக இவ்விதழில் வெளிவந்துள்ளது.

சமயஅறிவு,சமயவாழ்க்கை மக்களிடத்தில் அருகி வருமிக்காலத்தில் இத்தகைய ஒரு சமயப் பத்திரிகை வெளிவருவது போற்றத் தக்கது. பிரசித்திபெற்ற தவயோகி பிரம்மஸ்ரீ சங்கரசுப்பையர் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். அவர் சங்கீதத்தில் வல்லவராய்ச் சிறந்த கதாப்பிரசங்கியாகி பாரத நாட்டிலும் ஈழநாட்டிலும் பக்திச்சுவையுள்ள கதாப்பிரசங்கங்களைப் புரிந்து மக்களுக்குத் தெய்வீகஉணர்ச்சியைப் பெருக்கி வந்தனர். அவரைப்போன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற பாகவதர் C. S. S. மணிஐயர் அவர்களும் சங்கீத வித்துவானுகி நமது நாட்டிலும், இந்தியாவிலும், மலாயாவிலும் பக்திச்சுவையுள்ள கதாப்பிரசங்கங்களைச் செய்து வருகின்றனர். வாக்கினுல் அவர் மக்களுக்கு வழங்குகின்ற கருத்துக்களை எழுத்துமூலமும் மக்கள் அறிய 'அருளமுதம்' சிறந்த சந்தர்ப்பம் அளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை மனிதனுக்கும் கல்விமுறை வேண்டும்

(தவத்திரு. மாணிக்கவாசக சுவாமிகளது விரிவுரையின் சாரம்)

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம், தென்னிந்தியா]

இன்று யாழ்ப்பாணம் நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசைநாள் கொண்டாடப்படுகின்றது. தவத்திரு நாவலர் பெருமான் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு சமய வளர்ச்சிக்குத் தாழ்வு உண்டாகிய போது தோன்றி சமயவளர்ச்சிக்கும் — தமிழுக்கும் அரும் தொண்டுகள் செய்துள்ளார்கள். ஆகவே நாவலர்பெருமான் அந்தக்காலத்திற்குச் செய்துள்ள தொண்டுகள இந்த காலத்திற்கும் அவசியமானதாகும், விஞ்ஞான வளர்ச்சியால் நாட்டில் விபரீத நிலைமை ஏற்பட்டு அணுகுண்டு வந்துள்ள இக் காலத்தில் மனிதன் தன்னைப்பற்றி ஒரு நிமிஷநேரங்கூட சிந்திக்க முடியாதநிலைமையில் நாகரீகப் போக்கில் போய்க்கொண்டிருக்கின்ருன். மனிதனும் இயந்திரமும்ஒன்ருகவே இருக்கும் நிலைமைஏற்பட்டுள்ளது; நாட்டில் சிறு அமைதியும், தெய்வ சிந்தனையும் காணப்படவில்லை, கல்வித் துறையைப்பற்றி ஆராய்ந்தால் அந்தக் காலத்தில் ஆங்கிலக் கல்வித்திறமை நனகு காணப்பட்டது, ஆனல் இந்தக்கால கல்வித்துறையில் மனிதனை மனிதனுக ஆக்கக்கூடிய கல்விமுறையையே காண முடியவில்லை, ஆகவே தற்காலத்தில் மனிதனை மனிதனுக ஆக்கக்கூடிய கல்விமுறையைத் திருப்பல் வேண்டும். இவ்வாறு சிதம்பரம் ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற குருபூசை வைபவத்தின் போது தவத்திரு மாணிக்க வாசகஞானதேசிகசுவாமிகள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்கள்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ. சின்னத்துரை மாணவ மாணவிகளுக்குப் பல பரிசுகள் வழங்கினுர். வித்துவான் ஸ்ரீ. கிருஷ்ண சாமிப்பிள்ளை பாராட்டுரை வழங்கினுர்.

காலையில் ஸ்ரீ. சேக்கிழார் கோயிலிலிருந்து மாணவ — மாணவிகள், ஆசிரியர்கள் (மொத்தம் 750 பேர்கள்) தவத்திரு. நாவலர்பெருமானின் திருவுருவப்படத்துடனும், முதற்பதிப்பு நூற் சுவடிகளுடனும், நாதசுர வாத்திய கோஷங்களுடனும் ஊர்வலம் புறப்பட்டு வித்தியாசாலையை அடைந்து தவத்திரு. நாவலர் பெருமானின் திருவுருவப்படத்திற்கு ஆராதனைகள் நடத்தி அஞ்சலி செலுத்தினுர்கள். பின்னர் எல்லோருக்கும் இனிப்பு, பூந்திப்பாக்கெட்டுகள் வழங்கப்பட்டபின் தில்லை ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தி வழிபாடுகள் செய்தனர்,

—

## கடவுளின் சொரூபம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வெண்பாவில் பொருள் விளக்குவாராயினர்,

ஒன்றென்றி தொன்றே
　காணென்றே பதிபசுவா
மொன்றென்ற நீ பாசத்
　தொடுளைா — ஞென்றின்ரு
லக்கரங்களின்ரு மகரவுயிரின்றே
　லிக்கிரமத் தென்னுமிருக்கு.
(11. 1. 2.)

'ஏகம்' என்ற சொல்லினுல் பதிப்பொருள் ஒன்று என்றும், அப்படிச் சொல்லுகிறவன் ஒருவன் உண்மையால் பாசத்தோடு ஒன்ருகிய 'துவம்' பதவாச்சியனவாகிய பசு உண்டென்றும், அத்விதீயம் (வேறென்றில்லை) என்றதன் பொருள், அகரவுயிர் இல்லாத காலத்து மற்ற அக்கரங்கள் இல்லையென்று சொல்லுதல் பேரலும், இக்கிரமத் தன்றே "ஏகமே வாத்விதீயம் பிரம்ம" என்ற வேதவாக்கியமும் எழுந்தது,

உயிர் எழுத்துக்கள் எழாத முன் மற்ற உடலெழுததுக்கள் உச்சரிக்க முடியாது. ஆகையினுலே உயிரெழுத்துக்கள் ஒன்றேயுளது வேறென்றில்லையென்று சொல்லாம்; ஆயினும் உயிர் மெய்யாகா, மெய் உயிராகா. மெய்யெழுத்தை உச்சரிக்கும் போது, உயிரும் மெய்யுமே நீக்கமின்றி அநாதியாய் ஓர் வித அபூர்வ சம்பந்தப்பட்டிருக்கிறது.

* இது ஆங்கிலேயத்தில் 'நியூ ரிபார்மர்' (New Reformer) எனும் பத்திரிகையில் 1907ல் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

(தொடரும்)

## வாயில்லாப் பிராணி

2-ம் பக்கத் தொடர்ச்சி

மதியீனமே! சைவத்திருவாளர்களே!

சைவசமயம் ஒரு புனிதமானது. அதன்பேருக்கு இயைய மங்கலகரமாக வாயில்லாப் பிராணிகளுக்குஉயிர்ப்பிச்சை கொடுத்து நாமும் பெண்டு பிள்ளைகள் சிறக்கச் சமய தீக்கை பெற்று இப் பிறவி சாபல்யமடையச் செய்தால் ஆன்மா அழியாப் பெருவாழ்வுள், இறைவரருள் வெள்ளத்துள் மூழ்கி இன்புறும்.

"கொல்லா விரதமொன்று
　கொண்டவரே நல்லோர்கள்
மற், றல்லாதார் யாரோ,
　அறியேன் பராபரமே".
சிவகருணை வளர்க.

—

## அனுதாபத் தீர்மானம்

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் காவலர் திரு. இ. சண்முகதாச மாப்பாண முதலியாரின் பிரிவு குறித்து அனுதாபந்தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று 19-12-64ல் நடைபெற்ற நல்லூர் தெற்கு சன சமூக நிலையக் கூட்டத்தில் நிறைவேறியது.

"காலம் சென்ற மாப்பாணர் நல்லைக்கந்தன் கோயிலை நல்ல முறையில் நிர்வகித்து வந்தார். அவருடைய நிர்வாகத் திறமை அனைவராலும் பராட்டக்கூடியதாகவும், எல்லாக் கோவில்களாலும் பின்பற்றக்கூடியதாகவும் இருந்தது அவருடைய பிரிவு சைவ உலகிற்கு ஓர் மாபெரும் இழப்பாகும்". இவ்வாறு அத்தீர்மானத்தில்குறிப்பிடப்பட்டிருந்தது.

—

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 3930.

ஆறுமுகம் சின்னத்தம்பி
　ஒகஸ்தீனு,
சுண்டிக்குளி — யாழ்ப்பாணம்
　—வழக்காளி

எதிராக

1, தம்பிமுத்து சாமுவேலும் மனைவி
2. றெவெக்கா,
　பழம் பூங்கா வீதி ரோட்டு,
　யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு M 3930 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1965-ம் ஆண்டு (30-1-65) முற்பகல் 10½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 7474-ம் 1-3-61 தொடக்கம் 15-5-62 வரையில் ரூபா 6000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்ருக இறுபடும் வரையில் முழுக் கூட்டுத்தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ஏற்கனவே கொடுபட்டது.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி இறை, சுண்டிக்குளி கோவில்பற்று சுண்டிக்குளி இறை "முதலைக்குழவயல்" அல்லது முதலைக்குழத்துப் புலம், பர. நில, லாச்சம் 4. இக்காணி நில அளவைக்காரன் N, தம்புவால் 1956-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ந் திகதி தயாரிக்கப்பட்ட 485 ஆம் இலக்கம் கொண்ட படத்தின்படி வடக்குப் புறமாக நிந்தமாக இரண்டாம் துண்டெனக் காட்டப்பட்ட பர. நில. லச்சம் 2-ம், புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும் இந்த இரண்டாம் துண்டிலிருக்கும் கிணற்றில் ஒரு பாகமும் வான் பயிர் செய்பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும். இந்த நிந்தமான வடக்குப்புறமாயுள்ள 2 பரப்பிற்கு எல்லை கிழக்கு மாச்டன் பெண் கிறேசுவின் ஆதனம், வடக்கு படத்தில் காட்டப்பட்ட முதலாம் துண்டு, மேற்கு மலவக்குழும் ரோட்டும், பழம் பூங்கா வீதி ரோட்டும், தெற்கு படத்தில் காட்டப்பட்ட 3-ம் துண்டு.

க, செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 7-12-64.
M 241 25-12-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில்
　வேலாயுதர் ஐயாத்துரை
　　—வழக்காளி

இல, M.B, 5315.

எதிராக

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு காலஞ்சென்ற சின்னப்பு சுப்பிரமணியத்தின் ஆதனங்களுக்குத் தத்துவகாரி, கொக்குவில் கிழக்கு சுப்பிரமணியம் கைம்பெண் நாகரத்தினம்,
　—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 5315-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி [illegible] கப்படும் துண்டுக்காணி 1965ஆ மாசிமீ 20உ (20-2-65) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 5525/- இதில் ரூபா 3000 க்கு 4-1-63 தொடக்கம் 1-8-63 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியையும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியையும் கோட்டுச்செலவு ரூபா 150/-. இதில் ரூபா 3000/- தீர்வையின் [illegible]

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று, கொக்குவில் கிழக்கிறை "பயறைக் கட்டையும் தலையாழியும்" நில, பர,7 குளி 4-ம், புதிய கல்வீடும் கிணறும், குசினியும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு சுந்தரம் கைம்பெண அன்னபூரணத்தினுதனம், தெற்கு வேலுப்பிள்ளை மூத்துத்தம்பியினுதனம் இதடங்கலும், D 232/33-ல் பதியப்பட்டது.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
24-ம் நம்பர், 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம், 7-12-1964.
M 239 25-12-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

வழ, இல. P. 652,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு P. 652 இலக்கப் பிரிவிடல் வழக்கின் தீர்வைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி சனிக்கிழமை (9-1-65) பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். குடியிருக்க வசதியான 2 பரப்புக்கொண்ட 10 துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும்.

காணி விபரம்:

வலிகாமம் வடக்கு: தெல்லிப்பளைப்பற்று, பாலை இறை. காங்கேசன்துறைப் பட்டினசபை நிலயத்திற்குச் சமீபத்தில் கீரிமலை வீதிக்கு அருகிலுள்ள 'வண்டிப்பிள்ளையான்காடும், மாங்காடும்" நில. பர. 23. குளி 13, இதற்கு எல்லை கிழக்கு 14 அடி ஒழுங்கையும், கந்தையா பரஞ்சோதிக்கும், மா, தில்லையம்பலத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு கடல், மேற்கு பொன்னு செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கீரிமலை வீதி.

க: ஐயாறு,
கொமிஷனர்,

K. Aiyaru,
Chartered Surveyor,
13, Nachchimarkovil Road,
Jaffna.
M 243 25-12-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிககோட்டில்
நல்லூர், தற்பொழுது
அராலி வடக்கு
1. சின்னத்தம்பி ருமலிங்கம் அருமைநாயகமும்
2. பெண் பகவதியும்,

No. M.B, 5876

எதிராக

ஈச்சமோட்டை
1. வின்ஸன்ட் செறல்ட் அன்னப்பாவும்
2, பெண் எலன் தெரஸா லீலாவதியும்
வட்டுக்கோட்டை கிழக்கு
3. முருகேசு கந்தையாவும்,
4. பெண் செல்லம்மாவும்
5. ருசைய சண்முகநாதன் பெண் தனலஷ்மியும்
6. ருசையா சண்முகநாதனும்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5876 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1965ஆ மாசிமீ 13உ (13-2-65) 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 11927-50. இன்னும் ரூபாய் 10000-க்கு 22-7-63 தொடக்கம் 6-3-64 வரைக்கும் 9%வீத வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 530-96 சதமும்,

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக்கோயிற்பற்கு சுண்டிக்குளியிறை "பிரம்படியிற்புலவயல், பிரம்படியிற் பள்ளம் வயல்புலம், பிரம்படியிற் புலம்" பர. நில. இலா. 3-0 குளி உத்தரவு பெற்ற உலாந்தா ஏ. லாசறஸ் அவர்களால் 1-10-60 இல் இல. 2785 இன்கீழ் விஸ்தரிக்கப்பட்ட படத்தில் "B" என்று காட்டப்பட்ட துண்டு ஒரு பரப்பும் பதிவு இலக்கம் D 279/128, இன்னும் இத் துண்டுக்கு கிழக்கே இருக்கும் பர, நில. இலா. 2, 0 குளி, பதிவு இலக்கம் D 235/73, இவ்விரண்டு துண்டுகளும் கூடி பர. நில. இலா, 3, 0 குளி, மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். இதற்கெல்லை கிழக்கு நடராசா பெண் அலிசுவினுதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஷை படத்தில் 'A" என்று காட்டப்பட்ட நீக்கிலாபிள்ளை அந்தோனிப்பிள்ளைக்கும் பெண் ஞானபூரணத்துக்கு முரிய வாதனம், தெற்கு அந்தரேசு ஜொவாம்பிள்ளைக்கும் பெண் ஞானப்பிரகாசத்துக்குமுரியவாதனம்.

ஷை காணிக்குப் போக்குவரத்துப் பாதையாக வழங்கும் "முதவிப்புலம்" மறுநாமம் "கப்டின் பூங்கா" பர,நில,இலா 0, 3 குளி. காணியில் பாவிப்புரித்தும். இதற்கெல்லை கிழக்கு அந்திரேசு ஜொவாம்பிள்ளைக்கும் பெண் ஞானப்பிரகாசத்துக்கு முரிய வாதனம், வடக்கு மேற்படி படத்தில் "C" என்று காட்டப்பட்டிருக்கும் துண்டு, மேற்கு ஏ. வி, துரைராஜா பெண் செல்வமலர் ரோஸலினுதனம், தெற்கு ஒழுங்கை, இதடங்கலும் ஆனல் மேற்படி படத்தில் "G" என்று காட்டப்பட்டிருக்கும் காணிக்கு இப் பாதையால் போக்குவரத்து உரிமைகள் பிறநீங்கலாக.

செ. விசாகரெத்தினம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
133 பருத்தத்துறை ரோட்டு.
நல்லூர், யாழ்ப்பாணம்,
15-12-64.
M 245 25-12-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே
யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி
நாகநாதர் சங்கரப்பிள்ளை
　வழக்காளி.

இல: M B 5202

எதிராக

யாழ்ப்பாணம் கந்தர்மடம், புகைரதவீதி, 7/2 ம் இலக்கத்தில் வசிக்கும் 1. கணபதிப்பிள்ளை கனகசபையும்
2. பெண் இராசம்மாவும்,
　எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5202ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் காணும் ஒரு துண்டுக் காணி 1965 ம் ஆ ஜனவரிமீ 28உ வியாழக்கிழமை (28-1-1965) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள்நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4820/-ம் மேலும் ரூபா 3000 க்கு 8-11-62 தொடக்கம் 21-3-63 வரை 12 வீத வட்டியும் கூடியதொகைக்கு 21-3-63 தொடக்கம் இறுபடும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 270-30ம் ஆனல் இதில் கொடுபட்ட தொகை ரூ 1000 ம் கழிபட வேண்டும்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணூர்பண்ணைக்கோவிற்பற்று வண்ணூர்பண்ணை தென்கிழக்கு இறை "குஞ்சியங்கன் வழவும் பெரியங்கன் வழவும் செட்டிதாழ்வும்" நி பர (7) ஏழு குளி (11) பதினென்றும் கக்கூசும் செய்பயிர் வான் பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு 1943ம் ஆ கார்த்திகைமீ 1ந்உ உலாந்தா திரு. T, சின்னத்துரையவர்களால் 34/A என்னும் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டுள்ள படத்தில் 1ம் கண்டமெனச் சுட்டப்பட்டிருக்கும் சுப்பையா தியாகராசாவுக்குரிய காணி. மேற்கு அரசாங்க புகையிரத நிலயத்துக்குரிய ஆதனம். தெற்கு வேலர் கந்தர் மகள் பூரணத்துக்குரிய ஆதனமும் ஒழுங்கையும். பதிவு இல D 245/266.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு
21-12-64.
M 244 25-12-64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மெய்யடியார்களும் அனுபவவாயிலாக அறிந்து எமக்கென விட்டுச் சென்ற முதுசொத்தாகும். அதனை நாம் படிக்கின்றோம். ஆனல் அந்நிலையை விளங்கிக்கொள்ளும் வாய்ப்பு எமக்கில்லை. அத்தகைய உண்மை நிலையினை விளங்கிக் கொண்டோமேயானல் இவ்வுலகிலுள்ள அத்தனை அல்லல்களும் நீங்கி அன்பு மயமாய இன்ப முகமாக வாழ்வோம் என்றதற்கையமிலது. அந்நிலை எய்துதல் தான் அரிது.

அத்தகைய இன்ப நிலையினை - ஆத்ம இன்பத்தை அடையும் வழிதான் யாது, என வினவுவார்க்குக் கூறுதும். உலகாயத இன்பம அவாவினல் ஏற்படுகின்றது. ஒன்றினைப் பெறுவதற்காக அதே நினைவாக பெறக்கூடிய வழிகளை ஆராய்ந்து அவ்வழியிலே இம்மியும் தவருது முயன்று பெறுகின்றோமல்லவா. பெறுவதிற் சுலபமில்லையெனினும் — கஷ்டத்தைப் பொருட்படுத்தாது முயன்று பெறுகிறோம் இது சிறுபோழ்து அனுபவிக்கக்கூடிய அந்த இன்பத்திற்காக நடைபெறுகின்றது. ஆனல் என்றும் தெவிட்டாப் பேரின்பம அடைய முயல்கின்றோமோ என்றால் அஃதில்லை. ஏனெனில் விடை "கஷ்டம்" என்கின்றனர். அதுமட்டுமல்ல இதில் பலனை உடனுக்குடன் எய்தமுடியாது என்பதனுலேயேயாகும்.

இந்த இன்பம் எய்துதற்கு "அவா அறுத்தல்" வேண்டும். சிறறின்பத்திற்கு "அவா இருத்தல்" வேண்டும். அதுவே வித்தியாசம். அவாவை அறுப்பது சுலபமான வேலை அல்ல. அவா அறுத்துவிட்டோம் என்பார்கூட சிற்சில வேளைகளில் அவ்வாறு இல்லை என்பதனை உணர்ந்து கூறியுள்ளனர். அதனைப்படிப்படியாக அறுத்து வர வேண்டும். திடீரென அறுப்பது சுலபமன்று. அறுந்ததுபோற் காணப்படினும் அறுந்ததாக இராது. இது அனுபவ ஞானிகளின் அனுபவக்கூற்று. நம உலகில் நிலைத்து வாழுகின்ற அத்தனை சமய ஞானிகளும் கூறியதும் இதுவேயாகும். யேசுகிறீஸ்துநாதரோ. முகமது நபியோ, புத்தரோ என்னசொன்னர்கள். ஏன் அண்மையில் நம்மைவிட்டுச் சென்ற மகான் மகாத்மா என்ன சொன்னர். "தனக்கென்ன எதனையும் சேர்க்காதே" என்றுரல்லவா. அதுவே அவா அறுத்தலாகும். தெய்வப்புலவர், வள்ளுவ நாயனுரும்,

> "ஆரா வியற்கை
> அவாநீப்பின் அந்நிலையே
> பேரா வியற்கை தரும்."

என்றார். எத்துணை அறிவாளியும் இதனை அறுத்தெறிவதென்பது முடியாதவொன்றாகும் இதனை ஒரு நெறிப்படுத்திச் சிறிது சிறிதாக அறுத்துவரல் வேண்டும். அப்பொழுதுதான் 'பேராவியற்கை'வரும். அதனைப்போன்ற "விழுச்செல்வம் யாண்டுமில்லை" என்பதனை உணரக்கூடும், இந்த நெறிகளையே கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்று வகுத்துள்ளனர் ஆன்றோரும். இந்நெறிகட் பயின்று நிலைபெற்ற இன்பம் எய்துவோமாக. அதுவே நாம கூறும் முத்தி என்ற ஆத்ம ஆன்பமாகும், பக்திமுத்தி கிட்டுமல்லவா!

## ஆருத்ரா தரிசனம்

ஊற்றங்கரைப் பிள்ளையார் கோயிலில் திருவெம்பாவையை முன்னிட்டுப் பத்துத் தினங்களும் விசேட பூசைகளும் 'திருவாதவூரடிகள்' புராணபட்னமும் நடைபெற்றன.

இறுதிநாளன்று உதயத்தில் ஆருத்ரா தரிசனமும், அதன்பின்பு தீர்த்தோற்சவமும், திருவூஞ்சலும் நடைபெற்றன.

ஓட்டிசுட்டான் தான்தோன்றி ஈசுவரன்கோவிலில் பத்துத்தினங்களும் விசேட திருவிழாக்களும் நடைபெற்றன.

## சிறந்த தெய்வ பத்தர்

### நல்லூர்க் காவலர் பிரிவுக்கு கி. மு. சங்கம் அனுதாபம்

"நல்லூர்க்கந்தசுவாமிகோயில் நமது நாட்டுககு ஒரு கலங்கரை விளக்கம. பழம்பெருமை வாய்ந்த இவ்வாலயத்தைச் சிறந்த முறையில் நிர்வகித்து வந்த பெருமை தேவஸ்தானகாவலர் ஸ்ரீ இ. சண்முகதாசமாப்பாண முதலியார் அவர்களுக்கே உரிய ஒன்றாகும். அவருடைய நிர்வாகத் திறமை எல்லோராலும் போற்றபட்டு வந்ததுடன், "நல்லூரைப் பார்- அக்கோவில் ஒழுங்குமுறைகளைப் பின்பற்று" என்று சொல்லுமளவுக்கு மககள் உள்ளத்தைக கவாந்து விளங்கின. திருவிழாக்கள் அமைய வேண்டிய முறைகளைச் செயலில் காட்டி வருமின்னுளில் அவருடையபிரிவு சைவஉலகிற்கு ஓர் பேரிழப்பாகும்" இவ்வாறு நாயன்மார்கட்டுகிராமமுன்னேற்றச்சங்கத்தின் 17-12-64 ல் நிகழ்ந்த நிர்வாகசபைக் கூட்டத்தில் ஓர் அநுதாபத் தீர்மானம நிறைவேற்றப்பட்டது. ந—நி.

## நாடிய மனத்துள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராய் வந்து நரியைப் பரியாக்கி பரியை நரியாக்கி தமது திருவிளையாடலைச்செய்தார். இது மட்டுமா? கூலியாளாகவந்து பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியனிடம் அடியும்பட்டார் இப்படியெல்லாம் இறைவன் தன்னை ஆட்கொள்ள முயன்ற செயலை மணிவாசகர் எண்ணி உருகித் தேனினுமினிய திருவாசகங்களை மேலும் பாடினுர். சிவபெருமான அந்தணர் உருவில் வந்து, திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எழுதித் தனது கையெழுத்தையும் இட்டுத் திருமுறைகளைக் கனகசபையில் வைத்தார். திருமுறைகளுக்குப் பொருள் கேட்ட தில்லைவாழந்தணருக்கு வாதவூரர் இறைவனைச் சுட்டிக்காட்டி நடராசப் பெருமானே இதன் பொருள் என்று கூறி அவருடன் இரண்டறக்கலந்தார். திருவாசகமும் திருக்கோவையாரும் மக்களை உய்விக்கச் சிறந்த நூல்கள். நாம் அவற்றை ஓதி இறைவனை நாடிய மனத்தவராகி, அவனருளைப் பெற்று நற்கதி அடைவோமாக.

## திருவாசகம் ஓர் அன்புக் கொடை

மணிவாசகர் விழா காரைநகர் சிவன்கோவில் மணடபத்தில் நடந்தேறியது. 3-ம் நாள் நிகழ்ச்சிகளுக்கு திரு கே. பி. ஹரன் தலைமைதாங்கினுர். வித்துவான் க. கார்த்திகேசு, புலவர் செல்வி பூரணம் கந்தப்பு, வித்துவான க. வேந்தனுர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். திரு. வேந்தனுர் பேசுகையில் திருவாசகம் ஒரு அன்புக்கொடை யெனவும், திருக்குறள் ஒரு அறிவுக் கொடையெனவும் மேல்நாட்டினரே வியந்து போற்றி வருகிறுர்கள் என்று கூறினுர். திருவாசகத்திருமுறை ஓதலுடன் 3-ம் நாள் நிகழ்ச்சிகள் முடிந்தன. 4-ம் நாள் நிகழ்ச்சிகளின்போது, 'நந்தனுர்' என்னும் பொருள்பற்றிச் செலவன் பொ. ரகுபதியும், முத்தமிழ்மணி வண்ணை C S. S மணிபாகவதர் அவர்களும் சங்கீதகதாப்பிரசங்கம் செய்தனர். திருமதி கமலா விவேகானந்தாவின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது.

## ஐந்தொழில் முதல்வன்

ஸ்ரீ வ. குகசர்மா

உயிர்களாகிய பசுக்களுக்குத் தலைவன் சிவபெருமானே. எனவே இறைவனைப் பசுபதி என்று சொல்வர். அந்த இறைவன் சராசரங்கள்தோறும் எள்ளும் எண்ணெயும் போலவும் மணியும் ஒளியும் போலவும், மலரும் மணமும் போலவும்சராசரங்கடோறும் கலந்திருக்கின்றுர். அவ்வாறு கலந்து நின்றுலும் அப்பொருள்களின் குணத்தைச் சாராது தனியாகவும ஏகவஸ்துவாகவும் இருக்கிறுர். அந்த இறைவனுக்கு மேலானவரோ, அல்லது சமனுனவரோ ஒருவரும் இல்லை.

அவ்வாருகிய பெருமையினையுடைய இறைவன் செய்யும் தொழில்கள் ஐந்து. அவை படைத்தல், காததல் அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. இவற்றுள் படைத்தல், காத்தல்தொழில்களைப் பிரமதேவரும் விட்டுணு தேவரும், செய்வதாகக் கூறினும், சிவபெருமானே அத்தொழில்களை அவர்களை அதிட்டித்துச் செய்விக்கிறுர் சிவபெருமானே செய்கின்றுர். இறுதியில் உள்ள சங்காரத் தொழிலை சிவபெருமான் வேறெருவர் மூலம் செய்யாமல் தாமே நேரிற் செய்கிறுர். சங்காரத் தொழில் என்றுல் என்ன? ஓயாமல் பிறந்து இறந்து வருந்துகின்ற ஆன்மாக்கள் ஓய்வாக இருப்பதற்காக உயிர்கள் யாவற்றையும் தம்மிடத்தே ஒடுக்குதல். இவ்வாறு இறைவன் ஒடுக்கும் போது பிரம விட்டுணுக்களும் ஒடுக்கப்படுகிறுர்கள் மீண்டு உயிர்களின் எஞ்சிய வினைக்கேற்ப இறைவன் அவர்களைத் தம்மிடத்தே இ[illegible] தோற்றுவிக்கிறுர் இவ்வாறு சங்காரத தொழிலை ஒன்றினுலே ஈசனின் சர்வவல்லமை விளங்குகின்றது

இவ்வாறுன ஒரு பெரும சைவசித்தாந்தக் கருததை 'பேரறவு கொண்ட" ஆசிரியர் "நல்லந்துவனுர்" தாம இயற்றிய நெய்தற்கலியிலே இயற்கைக் காட்சிமூலம தெளிவுபடுத்துகிறுர் சூரியன் காலையிலே தோன்றுகிறுன அப்போது கதிரவனிலிருந்து பல்லாயிரக்கணக்காய கதிர்கள் விரிகின்றன. அன்று பகற்பொழுது கழிந்து மாலை நேரம் வருகின்றது. கதிரவன் தன் கிரணங்களைத் தன்னில் ஒடுக்கிக்கொண்டு மறைகின்றுன். இக் காட்சியை உவமிசக வந்த புலவர் பின் வருமாறு கூறுகிறுர். "பலகோடிஅண்டங்களில் வாழும் உயிர்கள் அனைத்தும் பழைய ஊழிக்காலத்தில் தோன்றிய முறைகெட்டு, அவற்றைத் தோற்றுவித்ததன்னிடத்திலே ஒடுக்குவதை விரும்பும் ஊழி முடிவில் அவ்வுயிர்களைப் பண்டு படைத்த தன்னிடமே அடக்கிக்கொள்ளும் இறைவனைப் போல" இவ்வாறு கூறும் நெய்தற் கலியின் அடிகள்,

> 'தொல்லூழி தடுமாறித்
> தொகல்வேண்டும்
> பருவத்தால்
> பல்வயின் உயிரெல்லாம்
> படைத்தான்கண்
> பெயர்ப்பான்போல்
> எல்லூறு தெறுகதிர் மடங்கித்
> தன்கதிர் மாய"

என்பன.

மிகப் பெரிய உண்மையை யாவருக்கும் புலப்படும்படி சிறு உவமை காட்டிய புலவர் தம்திறன்போற்றுதற்குரியது.

யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்
அல்வாய் வடக்கு, முருகுப்பிள்ளை பதஞ்சலி,
மறுநாமம் பரமூர்த்தி —வழக்காளி,
இல. 7434.

எதிராக:

அல்வாய் வடக்கு, காலம் சென்ற கணபதிப்பிள்ளை வெற்றிவேலுவின் உருமைக்காரி வெற்றிவேலு கைம்பெண் அன்னப்பிள்ளை —எதிரி.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் குறித்த கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1965-ம் ஆண்டு தை மாசம் 9-ம் திகதி சனிககிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக்கோயிற்பற்று, அலவாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை "கம்புளிககப்பன்" நிலப்பரப்பு 71 7/8, மேற்படி தோட்டம் ஒன்று, பனைகளும், வடலிகளும். கிணறுகளும், எல்லை கிழக்கு சின்னையா மகள் சின்னப்பிள்ளைக்கும், மறுபேருக்கும்- வடக்கு ஏரம்பு வயிரமுததுவுக்கும் மறுபேருக்கும், மேற்கு அருணுசலம் சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்கும். தெற்கு ரோட்டு. இவ்வெல்லைக்குட்பட்டவையில் இக்காணிக்கூடாகப் போகும் ரோட்டுக்கு விடப்பட்ட நிலம் புறநீங்கலாய் மிகுதியில் சொரியலாய் 7/72 பங்கில் அரைவாசி.

அறவிடவேண்டிய தொகை:

| | ரூ. ச. |
|---|---|
| தீரட்சித்தொகை | 1446-10 |
| வட்டி 30-5-62 தொடக்கம் 13-12-62 வரை ரூபாய் 1000/00 10 வீதம் | 53-60 |
| மொத்தம் | 1499-70 |
| வட்டி 13-12-62 தொடக்கம் 5-10-64 வரை நூற்றுக்கு 5 வீதப்படி ரூபாய் 1499-70 க்கு | 137-00 |
| கோட்டுச் செலவு | 289-91 |
| கூடிய மொத்தம் | 1926-61 |

வட்லிப்பாதி, தும்பளை
பருத்தித்துறை. 23-12-64.

ஆ. சபாரத்தினம்,
Commissioner of Sale

M, 249 25—12—64.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை நாவலர் வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை [illegible] இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 25-12-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org